**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் “தாய்வீடு” பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், ‘தாய்வீடு’ தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

***K.S. பாலச்சந்திரன்***

## ஆடித்து முத்துக்கள் 54

# மூத்த ஒலிபரப்பாளர் விவியன் நமசிவாயம்

**- அ. கனகசூரியர் -**

இலங்கையின் ஒலிபரப்புத்துறை வரலாற்றில் 84 வருடங்களை நிறைவு செய்ததன் மூலம் மூத்த வானொலியாகப் பெருமைபெறும் இலங்கை வானொலியில் கடமையாற்றி நேயர்களது நெஞ்சில் நிறைந்துள்ள ஒலிபரப்பாளர்களுள் ஒருவராகத் திகழ்பவர் விவியன் எஸ். நமசிவாயம். இவர் இலங்கை வானொலியில் இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாகப் பணிபுரிந்து வெள்ளிவிழாக் கண்டவர்.

யாழ்ப்பாணம் காரைநகரின் ஒரு பகுதியான வலந்தலை என்ற ஊரில் 1921 மார்ச் மாதம் முதலாந் திகதி பிறந்தவர். திருசெல்வேலி காவியப் பாடசாலையில் கல்வி கற்று பின்னர் ஆசிரியப் பயிற்சி பெற்றவர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரி பத்திரிகையில் துணையாசிரியராக சிறிது காலம் பணியாற்றியவர்.

விவியன் நமசிவாயம் உள்ளிட்ட இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர்கள் எவ்வாறு இலக்கிய உலகில் பிரவேசித்தார்கள் என்பதையும் ‘மறுமலர்ச்சி’ சஞ்சிகையை எதற்காக ஆரம்பித்தார்கள் என்பதையும் பற்றி பேராசிரியர் கைலாசபதி, தனது கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“1938-ம் வருடமளவில், இளைஞர் சிலரின் ஆர்வத்திற்கும் துடிப்பிற்கும் ஈழகேசரிப் பத்திரிகை இடம் தரலாயிற்று. மணிக்கொடி, ஊழியன் ஆகிய இரு பத்திரிகைகளும் இவ்விளம் உள்ளங்களுக்குப் பொறாமைப்படத்தக்க முன் மாதிரியாக விளங்கின. இவ்விரு பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்த இலக்கிய சர்ச்சைகளை இவர்கள் கவனித்தனர். சிறுகதை, (வசன) கவிதை ஆகிய இரு துறைகளுந்தான் முன்னணியில் அடிபட்டன. இவற்றில் ஈடுபட்டவர்களின் பெயர்களும் அடிபடலாயின.

தி.ச.வரதராசன், அ.ந.கந்தசாமி, அ.செ. முருகானந்தம், விவியன் நமசிவாயம், ராஜ அரியரத்தினம், நாவற்குழியூர் நடராஜன் ஆகியோர் ‘இலக்கிய’ உலகில் பிரவேசித்தனர்.

ஈழகேசரி இவர்களது கன்னிப் படைப்புகளுக்கு இடம் தந்து வந்ததாயினும், வாலிபத் துடிப்பின் அவதியுடனும், இலட்சியக் கனவுகளுடனும் தமிழிலக்கிய உலகையே கலக்கிவிட வேண்டுமென முனைந்து நின்ற இவ்விளைஞர்களுக்கு, தமக்கென ஒரு இலக்கியப் பத்திரிகை அத்தியாவசியம் எனத்தெரிந்தது.

இக்காலத்தில்தான் திருச்சிப் பக்கமிருந்து ‘கிராம ஊழியன்’ வெளிவரத் தொடங்கியிருந்தது. ஈழத்திலிருந்து இவ்விளைஞரிற் சிலர் அதில் தம் முயற்சிகளை வெளியிட வாய்ப்புக் கிடைத்தது.



1946-ம் வருடம் யாழ்ப்பாணத்திலிருந்து ‘மறுமலர்ச்சி’ என்ற மாத சஞ்சிகை வெளிவரத் தொடங்கியது.”

ஈழகேசரி அனுபவத்தோடு விவியன் கொழும்பு வந்து சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியக் குழுவில் இணைந்து கொண்டார். பின்னர் இந்தியா சென்று பம்பாய், நாக்பூர் போன்ற இடங்களில் ஆசிரியராகப் பணி புரிந்து. நாடு திரும்பிய பின்னர் நுவரேலியாவில் உள்ள புனித திருத்துவக்கல்லூரியல் ஆசிரியப்பணியைத் தெடர்ந்தார்.

விவியன் நமசிவாயம் ஒலிபரப்புத்துறையில் இருந்த நாட்டம் காரணமாக 1951ம் ஆண்டில் பிரதி எழுத்தாளராக இலங்கை வானொலி தேசிய சேவையில் இணைந்தார். பின்னர் கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளராகி வானொலியில் கிராமிய நிகழ்ச்சிகளின் வளர்ச்சிக்கு பெரும்பணி ஆற்றினார். அந்நாளில் அவர் தொகுத்து வழங்கிய ‘கிராம சஞ்சிகை’ என்ற நிகழ்ச்சி விவசாய நேயர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுத் திகழ்ந்தது. ‘விவேகச் சக்கரம்’ என்ற பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சியையும் அவர் நீண்டகாலம் நடத்தி வந்ததுடன், பல விவரணச் சித்திரங்களையும் எழுதி வழங்கியிருக்கிறார்.

தனது அயராத உழைப்பினாலும் பெரு முயற்சியினாலும் உயர்ந்த விவியன் நமசிவாயம், 1967ம் ஆண்டில் வர்த்தக சேவையின் தமிழ் நிகழ்ச்சி முகாமையாளராகப் பதவியேற்ற பின்னர் கட்டுப்பாட்டாளராகினார். நேயர்களின் ரசனையையும் தேவையையும் அறிந்து சேவையாற்றி தன் மூலம் நேயர்களின் பெருமதிப்பைப் பெற்றார்.

வர்த்தக சேவையில் இணைந்து கொண்டதும் ‘கடிதமும் பதிலும்’ என்ற பெயரில் நிகழ்ச்சியொன்றை முதன் முதலாக அறிமுகம் செய்தார். வர்த்தக சேவை தொடர்பாகக் கருத்துக்களை எழுதியனுப்பும் நேயர்களது கடிதங்களை அந்த நிகழ்ச்சியில் அவரே வாசித்தும், பொருத்தமான வகையில் பதிலளித்தும் வந்தார். அவரது பதில்கள் ஒவ்வொன்றும் கருத்துச் செறிவும், அர்த்தம் உள்ளவாகத் திகழ்ந்தன.

வர்த்தக சேவையில் வெறுமனே திரைப்படப் பாடல்களை ஒலிபரப்பும் ஒரு சேவையாக அல்லாமல் அதை ஆரோக்கியமான வகையில் மாற்றியமைத்த பெருமை அவருக்கு உண்டு. நம்நாட்டு மெல்லிசைப் பாடல்களையும், துள்ளிசைப் பாடல்களையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நன்னோக்கு அடிப்படையிலும், இலைமறை காயாக விளங்கும் உள்ளூர் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலும் ஈழத்துப் பாடல்கள், பொப் இசைப் பாடல்கள், அரங்கேற்றம், இலைமறைந்த இசை போன்ற புதிய நிகழ்ச்சிகளை ஆரம்பித்தார். இலங்கைப் பாடகர்களின் தனித்துவமான ‘பொப் இசை’ என்பதான பெயரைச் சுட்டியதோடு அந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தவரே இவர் தான் என்று அறிவிப்பாளர் பி.எச்அப்துல் ஹமீட் குறிப்பிடுகிறார்.

வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகிவரும் நீண்டகால நிகழ்ச்சிகளான பொங்கும் பூம் புனல், இன்றைய நேயர், விடுமுறை விருப்பம், குடும்ப விருப்பம், பிறந்தநாள் வாழ்த்து, ஆடவர் அரங்கு, வாலிப வட்டம் போன்ற பல நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தவர் விவியனே.

விவியன் நமசிவாயம் வர்த்தக சேவைக்கு பொறுப்பாக இருந்த காலத்தில் அங்கு கடமையாற்றிய - ஒலிபரப்பாளர்கள் அனைவரும் இவர் மீது வைத்திருந்த பெருமதிப்பும், ஒலிபரப்பாளர்களுடன் இவர் கொண்டிருந்த நெருங்கிய உறவும் வானொலிக் குடும்பம் என்ற ஒரு உயர் நிலையில் ஒலிபரப்பாளர்கள் அனைவரும் இணைந்து செயலாற்றுவதற்கு துணை புரிந்தது.

விவியனின் ஒரு தசாப்த கால வர்த்தக சேவைப் பணியின் போது அமைக்கப்பட்ட அத்திவாரமே இன்றைய வர்த்தக சேவையின் பெரும் வளர்ச்சிக்கு காரணம் என்று சொல்வதில் தவறில்லை.

இவர் 1977ம் ஆண்டில் ஓய்வு பெற்றதன் பின்னரும் ‘இளஞ்சுடர்’ என்ற பெயரில் தேசிய சேவையில் கிராமிய இளம் நேயர்களுக்கான வாராந்த தொடர் சஞ்சிகை நிகழ்ச்சியொன்றை தொகுத்து வழங்கி வந்தார்.

விவியன் நமசிவாயம் 1998 ஜனவரி 30ந் திகதி காலமானார். இவர் மறைந்த பதின் மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் வானொலி நேயர்களாலும், ஒலிபரப்பாளர்களாலும் என்றுமே இதயங்களில் வைத்து மதித்துப் போற்றப்படும் ஒருவராகத் திகழ்ந்து வருகிறார்.

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

**www.inayam.net**